இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்வியில் முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை – 2010

**ESP 2332 –** கல்வியில் கணணித் தொழினுட்பம்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 19.12.2010 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

யாதாயினும் மூன்று(03) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

01. I. கல்வியினுள் தொழினுட்பத்தை பயன்படுத்த வேண்டிய தேவையினை நியாயிப்பதற்கு நான்கு காரணிகளை சுருக்கமாக விளக்குக. (40 புள்ளிகள்)

II. பின்வரும் எண்ணக்கருக்களை உதாரணங்களுடன் விளக்குக.

(அ) தொழினுட்பம் பற்றிக் கற்றல்.

(ஆ) தொழினுட்பத்தில் இருந்து கற்றல்.

(இ) தொழினுட்பத்துடன் கற்றல்.

(30 புள்ளிகள்)

III. மாணவரிடத்தில் அர்த்தமிகு கற்றலுக்கு உதவக்கூடிய வகையில் எங்ஙனம் தொழினுட்பத்தை பயன்படுத்த முடியும் என்பதை ஓர் உதாரணம் கொண்டு விபரிக்குக. (30 புள்ளிகள்)

02. கற்றல் கற்பித்தல் செயன்முறையில் கணணித்தொழினுட்பத்தை போதனா சார் அணுகுமுறையொன்றிலும் கட்டுறுவாக்க அணுகுமுறையிலும் பயன்படுத்த முடியும்.

I. பின்வரும் துறைகளினை மனதில் கொண்டு, கற்றலுக்காக பயன்படுத்தப்படும் போதனாசார் அணுகுமுறை, கட்டுறுவாக்க அணுகுமுறை என்பவற்றை ஒப்பிட்டு வேறுபடுத்துக(விடையினை அட்டவணை மூலம் முன்வைக்குக).

(அ) மாணவர் வகிபங்கு.

(ஆ) ஆசிரியர் வகிபங்கு.

(இ) தொழினுட்பத்தின் வகிபங்கு.

(30 புள்ளிகள்)

II. தமது கற்பித்தலின் வினைத்திறனையும் உற்பத்தித் திறனையும் அதிகரித்துக் கொள்வதற்கு ஆசிரியர்கள் ஒரு கருவியாக கணணியைப் பயன்படுத்தும் நான்கு சந்தர்ப்பங்களை விபரிக்குக. (40 புள்ளிகள்)

III கல்வியில் கணணித் தொழினுட்பத்தை ஒன்றிணைக்கும் போது ஆசிரியர்கள் எதிர் நோக்கும் சவால்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுக்கான தீர்வுகளையும் குறிப்பிடுக. (30 புள்ளிகள்)

(100 புள்ளிகள்)

03. ஆசிரியர்கள் கணணிமைய சாதனங்களை வடிவமைப்பவர்களாகவும் விருத்தி செய்பவர்களாகவும் தொழிலாற்ற முடியும்.

I. ஆசிரியரொருவர் கணணிமைய கற்றல் சாதனங்களை வடிவமைத்தல் மற்றும் விருத்தி செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய 5 பிரதான கட்டங்களை சுருக்கமாக விளக்குக. (50 புள்ளிகள்)

II. மேற்கண்ட வகிபங்குகளை ஆற்றுவதற்கு ஆசிரியர்களால் விருத்தி செய்யப்பட வேண்டிய தேரச்சிகள் மூன்றினை(03) குறிப்பிடுக. (30 புள்ளிகள்)

III. கணணிமைய கற்றல் சாதன விருத்திச் செயன்முறையில் "தனியாள் அணுகுமுறை" யினை விட "அணி அணுகுமுறை" ஏன் மிகப்பொருத்தமானது என்பதை விளக்குக (20 புள்ளிகள்)

(100 புள்ளிகள்)

04. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் (ICT) திறந்த மற்றும் தொலை கற்றல் முறைமைகளை(ODL) விருத்தி செய்வதில் என்றும் உதவிடுகின்றது.

I. பின்வரும் விடயங்களின் கீழ் ICT எவ்வாறு ODL முறைமைகளுக்கு உதவுகிறது என்பதை விளக்குக.

(அ) வினைத்திறனான கற்கை வழங்கல்.

(ஆ) கற்றலில் நெகிழ்வுத் தன்மை.

(இ) ஒத்துழைத்துக் கற்றலை மேம்படுத்தல்.

(30 புள்ளிகள்)

II. ஆசிரியருக்கு மிகப் பயனுள்ள "கற்றல் முகாமைத்துவ முறைமை" (LMS) யின் மூன்று பிரதான அம்சங்களை விபரிக்குக. (30 புள்ளிகள்)

III. தொலைக்கல்வியில் கற்போர்களுக்காக வடிவமைக்கப்பட்ட வலை – அடிப்படையிலான (Web – based) கற்றல் சூழலொன்றின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய வடிவமைப்பு விடயங்கள் 04 யினை விளக்குக. (40 புள்ளிகள்)

05. I. பின்வரும் பதங்களை வரைவிலக்கணப்படுத்துக

(அ) பன்மடி ஊடகம்(Multiple Media)

(ஆ) பல்லூடகம் (Multi Media)

(இ) இடைவினைக்குரிய பல்லூடகம்.

(30 புள்ளிகள்)

II. இடைவினைப் பல்லூடக கற்றல் சாதனமொன்றை விருத்தி செய்யக்கூடிய ஒரு தலைப்பிற்கு எண்ணக்கரு படமொன்றை வரைக. உமது எண்ணக்கரு படத்தில் பின்வரும் விடயங்களை குறிப்பிடுக.

(அ) பாட உள்ளடக்கத்தின் பிரதான தலைப்புகளும், உப தலைப்புகளும்

(ஆ) சிறப்பு கற்றல் அனுபவங்கள்

(இ) பல்லூடக ஒன்றிணைப்பு(விசேட ஊடகக் கூறுகள்)

(40 புள்ளிகள்)

III. மேற்கண்ட கற்றல் சாதனத்தின் இடைவினை தன்மையை மேம்படுத்த பயன்படுத்தக் கூடிய மூன்று உத்திகளை குறிப்பிடுக. (30 புள்ளிகள்)

(100 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றில் யாதாயினும் மூன்று(03) க்கு சிறு குறிப்பெழுதுக.

I. கற்றல் வளமாக உலகலாவிய வலை(www)

II. மென்பொருளின் பிரயோகமும் கற்பித்தலில் அவற்றின் பயன்பாடுகளும்.

III. கல்வியில் பல்லூடகத்தினை பயன்படுத்துவதில் உள்ள பலங்களும், வரையறைகளும்.

IV. அறிவினை கட்டியமைக்கும் கருவிகளாக கணணிகள்.

V. கணணி மைய கற்றல் சாதனங்களை மதிப்பிடுவதில் உள்ள நன்மைகள்.

($33\ 1/3 \times 3 = 100$ புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)